திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி நகர மகளிர் அணி துணை அமைப்பாளர் ரூபாவதி கணவர் சுப்பிரமணி, உடல்நிலை சரியில்லாத காரணத்தால் இல்லத்தில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. நேரில் சென்று நலம் விசாரித்து மருத்துவ செலவுக்காக நிதியுதவி வழங்கினார். உடன் நகர கழக செயலாளர் வி.வினோத் குமார், நிர்வாகிகள் ஜி.எஸ்.கணேசன், கே.எஸ்.அசோக்குமார், ஜி.சித்திக்அலி,எம்.ஷெரீப், உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, – ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, - கே.வி.லோகேஷ் பங்கேற்பு!

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி BLA2, BDA, BYA ,வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்! இரா.லட்சுமணன் அறிவிப்பு!

சென்னை, நவ.3,

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி இரா.லட்சுமணன் அறிவிப்பு வருமாறு :

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, துணை முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” SIR வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த ஆலோசனைக் கூட்டம் இன்று (03.11.2025 திங்கட்கிழமை) மாலை 5.00 மணியளவில் செல்வவாணிம ஹால் (தண்டையார் பேட்டை மணிக்கூண்டு அருகில்) பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் தலைமையில் நடை பெறுகிறது.

என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜ், பொ.து.ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், தொகுதி பொறுப்பாளர் கே.வி.லோகேஷ், என்.மருது கணேஷ், ஆர்.வெற்றிவீரன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இதில் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைபளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள், பாக இளைஞர் அணி நிர்வாகிகள், பாக தகவல் தொழில்நுட்ப அணி, கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ப.குமார், ச.தமிழ்ச்செல்வன், ஆகியோர் நன்றி கூறு கின்றனர்.

இவ்வாறு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஆரணி பேரூராட்சியில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” நிகழ்ச்சி 10–வது வார்டில் பி.முத்து ஏற்பாட்டில், க.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஜி.பி.வெங்கடேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.ரோஸ் பொன்னையன் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். இதில் ஜி.கரிகாலன், ஆர். கலையரசி, என்.ரகுமான்கான், சுபாஷினி ரவி, எல். உதயகுமார், சி.நீலகண்டன், கே.சூர்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.